# அன்பு, கிருபை, இரக்கம் மற்றும் ஞானஸ்நானம்

> *அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும் போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார் (ரோமர் 5:6-8).*

தேவனுடைய அன்பு, கிருபை மற்றும் இரக்கம் ஆகியவை இல்லையென்றால், நாம் அனைவரும் நித்திய தண்டனை என்ற அழிவுக்கு உட்பட்டிருப்போம். நமது இரட்சிப்புக்கு நம்மைத் தகுதியாக்கிக் கொள்ளவோ அல்லது நமது மன்னிப்பை உண்டாக்கிக் கொள்ளவோ நம்மால் எதுவும் செய்ய இயலாது. தேவனுடைய இயல்பும் செயல்பாடுகளுமே நமது இரட்சிப்பை நமக்களித்துள்ளன.

## தேவனுடைய அன்பு

“தேவன் அன்பாகவே இருக்கிறார்” *(1 யோவா. 4:8ஆ)* என்ற விளக்கத்தில் தேவனைப் பற்றிய விவரிப்பு ஒன்று காணப்படுகின்றது. தேவனுடைய அன்புதான் அவர் தம் குமாரனான இயேசுவை நமது பாவங்களுக்காக மரிக்கும்படி ஒப்புக் கொடுக்க அவரைத் தூண்டிற்று. நாம் யாராக அல்லது என்னவாக இருக்கின்றோம் என்பதாலோ அல்லது நமது நற்செயல்களினாலோ நாம் இரட்சிக்கப்படவில்லை ஆனால் தேவன் யாராக இருக்கின்றார் என்பதாலேயே நாம் இரட்சிக்கப்பட்டுள்ளோம். நாம் பாவிகளாயிருக்கையில், மன்னிப்புப் பெறத் தகுதியற்றவர்களாய், தண்டனைக்கு ஏற்றவர்களாய் இருக்கையில், தேவன் நமக்காகச் செயல்பட்டார்:

> நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம் மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார் *(ரோமர் 5:8).*

*தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை ... தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோவா. 3:16).*

*நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது (1 யோவா. 4:10).*

அவருடைய அன்புக்கு நாம் அருகதையற்றவர்களாயிருப்பினும், தேவனுடைய அன்பின் செயல்களினுடைய பயனைப் பெற்றுக் கொள்ளும் படியாக நாம் தேவனுக்குப் பதில்செயல் செய்ய வேண்டும். அன்புதான் தேவனை நமக்கு ஊழியம் செய்யும் செயல்பாட்டில் ஊக்குவித்தது. தேவன் மேல் நாம் கொள்ளும் அன்பானது நம்மை அவருக்குக் கீழ்ப்படுத்தும்படி தூண்ட வேண்டும் (யோவா. 14:15, 21, 23). அவர் நீதிமான்களின் பயனுக்கென்றுதான் செயல்படுகின்றார், ஆனால் துன்மார்க்கரை அவர் கவனித்துக் கேட்க மாட்டார்: "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது" (1 பேது. 3:12). தேவன் தீமையைப் பாராட்டு வதில்லை என்பதால் இது உண்மையாய் உள்ளது. அவருடைய குமாரனைக் குறித்து அவர், "நீர் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர்" (எபி. 1:9அ) என்று உரைத்தார். அவர், ''அக்கிரமக்காரர் யாவரையும்'' வெறுக்கின்றார் (சங். 5:5ஆ).

இயேசுவில் நம்பிக்கை வைக்காமல், தேவனுடைய அன்புக்குப் பதில்செயல் செய்யாமல் இருக்கின்ற துன்மார்க்கம் செய்பவர் தேவனு டைய கோபத்தின் கீழ் நிலைத்திருக்கின்றார். யோவான் 3:36, "குமாரனிடத் தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன் மேல் நிலைநிற்கும்" என்று கூறுகின்றது. ரோமர் 2:5ல் பவுல், ''உன் மனக் கடினத்திற்கும், குணப்படாத இருதயத்திற்கும் ஏற்றபடி, தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினை நாளிலே உனக்காகக் கோபாக்கினையைக் குவித்துக் கொள்ளுகிறாயே'' என்று எச்சரித்தார். (ரோமர் 1:18; எபே. 5:6; வெளி. 14:9, 10 ஆகிய வசனங்களை யும் காணவும்.)

தேவனுடைய அன்பும் கோபாக்கினையும் நேர்மாறானவைகளாய் இருப்பதில்லை, ஆனால் அவருடைய கோபாக்கினை என்பது அவருடைய அன்பின் விளைவாகவே இருக்கின்றது. இது, நாம் சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் எவ்விதம் பதில்செயல் செய்யலாம் என்பதைக்கொண்டு விவரிக்கப்பட முடியும். தனது கணவரை மிகவும் ஆழமான வகையில் அன்பு செய்கின்ற ஒரு பெண், அவர் இன்னொரு பெண்ணின்மேல் விருப்பம் கொள்ளும் போது பெரிதும் கலக்கம் அடைகின்றாள். அவள் தன் கணவர் மீது அன்பற்றவளாய் இருந்தால், அவர் எத்தனை பெண்களை விரும்பினா லும் அதற்காக அவள் அவர்மீது கோபம் கொள்ள மாட்டாள். தேவனுடைய

அன்பு என்பது அவருடைய வைராக்கியம் மற்றும் கோபாக்கினை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருக்கலாம் (யாத். 20:5; உபா. 4:24).

நாம் தேவனுடைய அன்பில் எவ்விதம் நிலைத்திருக்க முடியும் என்பதை இயேசு நமக்குக் காண்பித்து, கூறியிருக்கின்றார். அவர், "பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்" (யோவா. 15:9, 10) என்று உரைத்தார்.

தேவனுடைய அன்பு நிபந்தனைக்குட்பட்டதாய் உள்ளது. விசுவாசம், மனந்திரும்புதல், அறிக்கையிடுதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவை தேவன் நம்மை இரட்சிக்குமுன்பு நாம் நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகளாக அவரால் அமைக்கப்பட்டுள்ளன. நாம் இரட்சிக்கப்படுவதற்கு, அவர் மேல் நாம் கொண்டுள்ள அன்பின் விளைவாக இவற்றைச் செய்ய வேண்டும். அவருடைய அன்பை விரும்புவதற்காக அல்ல ஆனால் அவருடைய அன்பின் பயனை அடைவதற்காகவே நாம் இந்த நிபந்தனைகளை நிறைவேற்றுகின்றோம். நமது செயல் எதுவும் தேவனுடைய அன்பை ஈட்ட முடியாது; இருப்பினும், நமக்கு அவர் பலன் அளிப்பதற்கு முன்பு நாம் நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகளை அவர் குறிப்பிட்டுள்ளதால், நாம் அந்த நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். "தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி" (எபி. 5:9) என்று வாசிக்கின்றோம்.

## தேவனுடைய கிருபை

"கிருபை" என்று மிகவும் அடிக்கடி மொழிபெயர்க்கப்பட்டுள்ள charis (எபி.: hen) என்ற கிரேக்க வார்த்தையானது புதிய ஏற்பாட்டில் 155 முறைகள் வருகின்றன. இந்த வார்த்தையில் இருந்துதான் நாம் "charm" (வசீகரம்) என்ற வார்த்தையையும் அதன் இணை வார்த்தைகளையும் பெறுகின்றோம். நமது இரட்சிப்பானது தேவனுடைய இந்தப் பண்பையே சார்ந்துள்ளது. *The New International Dictionary of the Bible* என்ற நூலில் உள்ள ஒரு பாடத்தில் "கிருபை" என்பதற்கான விளக்கம் பின்வருமாறு தரப்பட்டுள்ளது:

> (1) சரியாகக் கூற வேண்டுமென்றால், இது மகிழ்ச்சி, சந்தோஷம், அக்களிப்பு, வசீகரம், இனிமை, அன்புக்குரிய தன்மை ஆகியவற்றைக் கொடுப்பதாயுள்ளது; (2) நல்ல சித்தம், அன்புள்ள இரக்கம், இரக்கம் முதலியன; (3) எஜமானர் தம் அடிமையின் மீது கொண்டுள்ள இரக்கம். இவ்விதமாக, ஒப்புவமையில் கிருபை என்பது மனிதரிடம் தேவன் கொண்டுள்ள இரக்கத்தன்மையைக் குறிப்பிட வந்துள்ளது (லூக். 1:30). [புதிய ஏற்பாட்டின்] எழுத்தாளர்கள் தங்கள் கடிதங்கள் பலவற்றின் முடிவில் தங்கள் வாசகர்கள் மீது தேவனுடைய கிருபையுள்ள தயவை அடிக்கடி வேண்டுகின்றனர் (ரோமர் 16:20; பிலி. 4:23; கொலோ. [1:2]; 1 தெச. 5:28), கூடுதலாக, "கிருபை" என்ற வார்த்தையானது, இரக்கத்தைப் பெறத் தகுதியற்றவர்களுக்குக்

காண்பிக்கப்படும் தயவு என்ற கருத்தை விளக்க அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றது: ஆகையால் தகுதியற்றவர்கள் மேல் தயவு, விசேஷமாக இயேசு கிறிஸ்துவின் மூலமாக பாவிகள் மேல் பொழியப்படும் தயவின் கிருபையினுடைய தன்மை அல்லது அளவை (எபே. 2:4-5) இது குறிக்கின்றது. ஆகையால், கிருபை என்பது, வீழ்ந்து போன மனிதர்கள் பெறத் தகுதியற்ற தேவன் காண்பிக்கும் தயவாக உள்ளது. பிதாவானவருடைய ஒரே பேறான, கிருபையும் சத்தியமும் நிறைந்தவரான (யோவான் 1:14) கிறிஸ்துவை மனிதரின் இரட்சிப்புக்காக தேவன் அளித்துள்ளதாக - உள்ளது.[1]

கிருபையின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்திக் கூற இயலாது. நாம் பாவத்தினால் கடன்பட்டவர்களாகவும், நமது பாவத்திற்கு எதையும் விலையாகச் செலுத்த முடியாதவர்களாகவும் இருக்கின்றோம். கடனின் அளவு என்பது வேறுபாடு ஒன்றை ஏற்படுத்துவதில்லை. ஒருவர் பத்தாயிரம் ரூபாய்களும் இன்னொருவர் பத்து ரூபாயும் கடன்பட்டு, இருவருமே அக்கடனைத் திருப்பிச் செலுத்த வகையற்றிருந்தால், இருவருமே கடனாளிகளாய் இருக்கின்றனர். இயேசுவின் இரத்தம் இல்லாமல், யாவரும் பாவிகளாய் உள்ளனர் (ரோமர் 3:9, 10, 23), மரணத்திற்குப் பாத்திரராய் உள்ளனர் (ரோமர் 6:23; யாக். 1:15) மற்றும் நமது பாவங்களுக்கு விலை செலுத்த நம்மிடம் எதுவும் இல்லாதவர்களாகவே நாம் இருக்கின்றோம்.

பத்து ரூபாய்க் கடன் மன்னிக்கப்பட்ட ஒரு நபரும், பத்தாயிரம் ரூபாய்க் கடன் மன்னிக்கப்பட்ட ஒரு நபரும் ஆகிய இருவரும் சமமாகவே கடனிலிருந்து விடுதலையானவர்களாய் உள்ளனர். ஒரு பாவம் அல்லது பல பாவங்கள் மன்னிக்கப்பட்ட யாவருமே சமமாக மன்னிக்கப்பட்டு, தங்கள் பாவங்களில் இருந்து சம அளவில் விடுதலை பெற்றவர்களாகவே இருக்கின் றனர். பாவம் நிறைந்த பெண்ணுடன் இயேசு பேசியதை பரிசேயர் ஒருவர் விமர்சித்த பொழுது, இயேசு, "... இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது; இவள் மிகவும் அன்புகூர்ந்தாளே. எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ, அவன் கொஞ்சமாய் அன்புகூருவான் ... ." (லூக். 7:47) என்று உரைத்தார். இதுவே தேவனுடைய கிருபையின் வனப்பாக உள்ளது.

கிருபையினால் நிறைந்தவரான (யோவா. 1:14) இயேசு நமக்குக் கிருபையை அளித்திருக்கின்றார் (யோவா. 1:16). மனிதனின் செயல்கள் யாவும் மனிதனின் ஒரு பாவக் கறையை நீக்க முடியாது (எபே. 2:8). மோசேயின் நியாயப்பிரமாணமும் (யோவா. 1:17) பாவத்தை எடுத்துப் போட முடியாது, ஏனெனில் அது கிருபையை அளித்ததில்லை (கலா. 5:4). பவுல், "நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறதில்லை; நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே" (கலா. 2:21) என்று எழுதினார்.

"அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு" (ரோமர் 3:24) நமது நீதியும் இரட்சிப்பும் அளிக்கப்படுகின்றது. பின்வருமாறு நாம் வாசிக்கின்றோம்:

நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல், கிருபைக்குக்

*கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது (ரோமர் 6:14).*

*அது கிருபையினாலே உண்டாயிருந்தால் கிரியைகளினாலே உண்டாயிராது; அப்படியல்லவென்றால், கிருபையானது கிருபை யல்லவே (ரோமர் 11:6).*

*கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல; (எபே. 2:8, 9).*

இரட்சிப்பு என்பது நமது செயல்களினால் அல்ல, ஆனால் தேவனுடைய செயலினாலேயே அளிக்கப்பட்டுள்ளது.

தேவனுடைய கிருபை, விலையேறப் பெற்ற அவருடைய தயவு என்பது ஒவ்வொருவருக்கும் கிடைத்திருக்க (தீத்து 2:11), எல்லாரும் அவருடைய கிருபையைப் பெறுவதில்லை. ஏனென்றால் கிருபையானது இயேசுவின் மூலம் வந்துள்ளது (யோவா. 1:17; ரோமர் 5:15), அவரைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் (யோவா. 1:11; 12:48) தேவனுடைய கிருபையைப் புறக்கணிக்கின்றனர். தேவனுடைய கிருபையின் காரணமாக இயேசு ஒருவரே தமது இரத்தத்தினால் நமது இரட்சிப்புக்கு விலை செலுத்தினார் (அப். 20:28; எபி. 9:14; 10:19, 20; 1 பேது. 1:17-19). ஆகையால், அவர் தாம் தேர்ந்துகொள்ளும் எவருக்கும், தாம் தேர்ந்துகொள்ளும் நிபந்தனைகள் எவற்றினாலும் இரட்சிப்பளிக்க உரிமை கொண்டுள்ளார் (எபி. 5:9).

ரோமர் 6ல் பவுல், "கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலை நிற்கலாம் என்று சொல்லுவோமா?"; "பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?" (வ. 1, 2) என்று கேட்டார். இந்தக் கேள்விகள், நாம் கிருபைக்குள் நுழையும் பொழுது பாவத்திற்கு மரித்து, பாவத்தை வழக்கமாய்ச் செய்வதை நிறுத்த வேண்டும் என்று மறைமுகமாய் உணர்த்துகின்றன. இது நடக்க வேண்டிய காலகட்டத்தைப் பவுல் இன்னொரு கேள்வியைக் கேட்பதன் மூலம் அடையாளப்படுத்தினார்: "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக் கிறீர்களா?" (வ. 3). பிறகு அவர், "மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்" (வ. 4) என்று எழுதினார்.

பவுலின் வார்த்தைகளிலிருந்து, நாம் ஞானஸ்நானம் பெறுகின்ற பொழுது தேவனுடைய கிருபைக்குள் பிரவேசிக்கின்றோம் என்று நாம் முடிவு செய்ய இயலும். நாம் இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெறுகின்ற பொழுது (ரோமர் 6:3), எபே. 1:7 மற்றும் 2 தீமோ. 2:1 ஆகியவற்றில் காணப்படுகின்றபடி இயேசுவுக்குள் இருக்கின்ற தேவகிருபையை நாம்

பெற்றுக் கொள்ளுகின்றோம். இவ்வசனப் பகுதிகள் ஞானஸ்நானத்தை அவருடைய கிருபைக்குள் பிரவேசித்தலுடன் இணைவு படுத்துகின்றன. ஞானஸ்நானம் பெறாதிருக்கின்றவர்கள் கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கின்றனர், கிறிஸ்துவை விட்டுப் பிரிக்கப்பட்டுள்ளனர் (எபே. 2:12, 13) மற்றும் அவர்கள் கிறிஸ்துவுக்குள் உள்ள கிருபை (கலா. 5:4) இல்லாது இருக்கின்றனர். தேவனுடைய கிருபையானது ஞானஸ்நானத்தில் ஈட்டப் படுவதில்லை, ஆனால் ஒருவர் ஞானஸ்நானம் பெறும் பொழுது அவரது விசுவாசத்தினிமித்தம் அவர் அந்தக் கிருபையினுள் பிரவேசிக்கின்றார். நாம் பாவம் நிறைந்த வாழ்வைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு அவரது கிருபையின்மேல் சார்ந்திருக்க முடியாது. ஒரு தரம் "பரிசுத்தமாக்கப்பட்ட" பிறகு "மனப்பூர்வமாய்ப் பாவம் செய்கின்றவர்கள்" "கிருபையின் ஆவியை நிந்திக்கின்றனர்." எபிரேயர் 10:26-29 பின்வருமாறு கூறுகின்றது:

> சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப் பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும். மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானா யிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள்.

## தேவனுடைய இரக்கம்

"இரக்கம்" (கிரேக்கம்: வினைச் சொல் - *eleeo*; பெயர்ச் சொல் - *eleos*) என்பது "எதிராளி அல்லது சட்டத்தை மீறியவர் மீது விதிக்கப்படும் தண்டனையிலிருந்து பொறுமையாகச் சகித்து [விலக்குத் தந்து] இருத்தல்; பலவீனர், வியாதிப்பட்டவர் அல்லது ஏழைக்கு ஒருவர் உதவக்காரணமான பரிவிரக்கம்"[2] என்று அர்த்தப்படுகின்றது. மேலும் இது கொடுத்த கடனைத் தமக்குத் திருப்பிச் செலுத்துதலை நாடாமையையும் உள்ளடக்குகின்றது (மத். 18:33). கிருபை என்பது இரக்கத்தை உள்ளடக்கியதாய் இருந்தாலும், கிருபையானது இரக்கத்திற்கும் அப்பால் செல்லுகின்றது. கிருபை மற்றும் இரக்கம் ஆகிய இரண்டுமே தவறொன்றைத் தண்டிப்பதிலிருந்து விலகியிருக்கின்றன; இருப்பினும், கிருபையானது அதற்கு அப்பாலும் சென்று, தவறு செய்தவருக்கு உதவியளிக்கின்றது.

வீடில்லாத மனிதர் ஒருவர் வேண்டுமென்றே ஒரு வீட்டைச் சேதப்படுத்துவாரென்றால், அந்த வீட்டின் உரிமையாளர் அந்த மனிதரை நியாயப்படி தண்டித்து மற்றும்/அல்லது சேதாரத்திற்குரிய விலைக் கிரயத்தை செலுத்தும்படி நாடலாம். வீட்டின் உரிமையாளர் பணம் திருப்பிச் செலுத்தக் கட்டாயப்படுத்தாமலோ அல்லது தீங்கு செய்தவர் தண்டனை பெறுதலை வலியுறுத்தாமலோ அந்த உரிமையாளர் விலகியிருப்

பாரென்றால், அவர் இரக்கம் காட்டுகின்றார். அந்த உரிமையாளர், சேதம் ஏற்படுத்திய மனிதரை மன்னித்து, அவர் வாழ ஒரு இடம் கொடுத்தா ரென்றால், அது கிருபையின் செயலாக உள்ளது.

தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிபவர்களுக்கு தண்டனை யிலிருந்து மன்னிப்பையும், விடுதலையையும் அவர் இரக்கம் நிறைந்த வகையில் ஏற்பாடு செய்துள்ளார். அவரது கிருபையின் காரணமாக, அவர் பரலோகத்தில் நித்திய ஜீவனை அளிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றார். தேவனுடைய இரக்கமானது, பாவிகளைத் தண்டிப்பதிலிருந்து அவரை விலக்கி வைத்துள்ளது மற்றும் அவரது கிருபையானது, (ஒருவர்) பெறத் தகுதியற்ற ஆசீர்வாதங்களை அளிக்க அவரைத் தூண்டுகின்றது.

“எல்லார் மேலும் இரக்கமாயிருக்கத் தக்கதாக, தேவன் எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள்ளே அடைத்துப் போட்டார்” (ரோமர் 11:32). முன்பு கீழ்ப்படியாமல் இருந்து, பின்பு கீழ்ப்படிந்துள்ள பாவிகளுக்கு மன்னிப்பு வழங்குதல் இரக்கம் எனப்படுகின்றது. பவுல் தம்மை, இரக்கம் பெற்றிருந்த பிரதான பாவியென்று முன்னிறுத்தினார் (1 தீமோ. 1:15, 16). தேவனுடைய மன்னிப்பு மற்றும் இரக்கம் ஆகியவை பவுலுக்குத் தமஸ்கு நகரில் காண்பிக்கப்பட்டன. பவுலிடம் அனனியா, “இப்பொழுது நீ தாமதிக்கிற தென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு” (அப். 22:16) என்று கூறினார். பவுல் ஞானஸ்நானம் பெற்ற பொழுது, அவர் தேவனு டைய இரக்கத்தை ஈட்டவில்லை; ஆனால் அவர் தேவனுடைய கிருபை மற்றும் இரக்கத்தால் அளிக்கப்பட்டுள்ள மன்னிப்பிற்குள் பிரவேசித்தார்.

## தொகுப்புரை

நாம் பாவிகளாய் இருந்த போதிலும், தேவனுடைய அன்பு, கிருபை மற்றும் இரக்கம் ஆகியவை நமக்கு உதவி செய்யும்படி அவரைத் தூண்டின. இப்படிப்பட்ட ஆசீர்வாதங்களைப் பெறத் தகுதியாகும்படி நாம் எதுவும் செய்ய முடியாது; இருப்பினும், இவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும். விசுவாசம், மனந்திரும்புதல், அறிக்கையிடுதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவை தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெறுவதற்குத் தகுதியுடைய சீர் பொருந்திய செயல்பாடுகள் அல்ல; மாறாக இவைகள், தேவன் தமது கிருபையிலும் இரக்கத்திலும் வாக்குத்தத்தம் செய்த தம் ஆசீர்வாதங்களை நமக்குத் தரும் முன்பு நாம் சந்திக்க வேண்டிய தேவைகளாக உள்ளன.

---

குறிப்புகள்

[1]J. D. Douglas and Merrill C. Tenney, eds., “grace,” in *The New International Dictionary of the Bible* (Grand Rapids, Mich.: Regency Reference Library, Zondervan Publishing House, 1987), 401. [2]J. D. Douglas and Merrill C. Tenney, eds., “mercy,” in *The New International Dictionary of the Bible* (Grand Rapids, Mich.: Regency Reference Library, Zondervan Publishing House, 1987), 641.